புதுமலர்: 19 இதழ்: 04 ஆடி - ஆவணி

# அனல்

01.07.2022

ஆசிரியர்: போதகர் வே.மகாராஜா



அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

## தேவன் மீதான நம்பிக்கையும்; உள்ளான அனலாகுதலும்!

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. வினா விடை - 110
04. போதகர் ஜே.கே.பிலிப் அவர்களிடமிருந்து
04. நற்செய்திப்பகுதி
05. குறுக்கெழுத்துப்போட்டி - 108
06. வாலிபர் வளாகம்
07. பெண்கள் பக்கம்
08. சிறுவர் வட்டம்
09. அருட்பணியாளர் சரிதை
10. அனலின் ஆன்மீக விருந்து
11. ஜெபமும் பாவமும்


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:

சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

அன்பின் அனல் வாசகர்களுக்கு

இயேசுவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்கள்!

ஆடி – ஆவணி மாதங்களுக்குரிய சஞ்சிகையை வெளியிடச் செய்த தேவனுக்கு நன்றி.

இது கடைசிக் காலம் அதற்கான அடையாளங்கள் வேதாகமம் சொல்லியபடியே நடந்தேறுகின்றது.

கொரோனா வியாதியின் பிடியில் சிக்கித்தவித்த உலகம் அதிலிருந்து கொஞ்சம் மீளும் போது உலகம் முழுவதும் வேறு பல பிரச்சினைகள் உருவாகி வருகின்றன. விதவிதமான பல நோய்கள், பஞ்சங்கள், பொருளாதார நெருக்கடிகள், நாட்டுக்கு நாடு யுத்தங்கள், இயற்கையின் அழிவுகள். ஆனாலும் எமக்கு ஒரு அசைக்க முடியாத நம்பிக்கை! நாம் இயேசுவைப் பற்றிப் பிடித்து அவர் வழியில் நடந்தால் அவர் எம்மைக் கைவிடவேமாட்டார்.

மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று வேதம் சொல்கிறது. **1தீமோத்தேயு 3:1-5 (1.) கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை. 2. ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்கவேண்டும். 3. அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பணஆசையில்லாதவனுமாயிருந்து, 4. தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும். 5. ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?**

வேதாகமம் பாவமென காண்பிக்கும் அனேக காரியங்கள் இன்னும் பல இருக்கின்றது. அவைகள் அனைத்தையும் விட்டுவிலகி தூய்மையான வாழ்வு வாழுங்கள். பாவங்களை இனங்கண்டு கொள்வது மட்டுமல்ல அதை நாம் செய்யாமல் இருப்பதே வெற்றி.

கிறிஸ்துவுடன் நடந்து இணைந்த வாழ்வுக்கு உள்ளான பரிசுத்தம் அவசியம்.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதையும் கற்றதும்

## வாழ்வின் இலக்கு

❐ வை. விமலதாஸ்

யானையின் சடலம் ஒன்று ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தது. காகம் ஒன்று அந்த சடலத்தைப் பார்த்ததும், மகிழ்ச்சியடைந்தது. உடனடியாகப்போய் யானையின் சடலத்தின் மீது அமர்ந்து கொண்டது. போதுமான இறைச்சியைக் கொத்திக் கொத்தி தின்றுவிட்டு, ஆற்றின் நீரைக் குடித்து ஆனந்தமாக அங்கும் இங்கும் பறந்து கொண்டிருந்தது. மிகுந்த திருப்தியுடன் தனது இறக்கைகளை விரித்துப் பறந்து ஆனந்தக்கூத்தாடியது.

காகம் யானையின் சடலத்தைப் பார்த்து நினைத்துக் கொண்டது, ஆஹா! இது மிகவும் அழகான வாகனம், இங்கு உணவு மற்றும் தண்ணீருக்கு எந்தப் பஞ்சமும் இல்லை. நாம் ஏன் இதைவிட்டுவிட்டு எங்கெங்கோ அலைந்து திரிய வேண்டும்?

ஆற்றங்கரையில் மிதந்து ஓடும் அச்சடலத்தின் மீது காகம் பல நாட்களாக கரைந்து கொண்டிருந்தது. பசி எடுத்தால் யானையின் சடலத்தை உண்பதும், தாகம் எடுத்தால் ஆற்று நீரை அருந்துவதும்... என அதன் வாழ்வே ஆனந்தமாக சென்று கொண்டிருந்தது.

பிரம்மாண்டமான நீர்நிலை, அதன் வேகமான ஓட்டம், கரையோரம் பரந்து விரிந்து கிடக்கும் இயற்கையின் அழகிய காட்சிகள் என எல்லாவற்றையும் கண்டு ரசித்துக் கொண்டிருந்தது.

ஆனால் நாட்கள் செல்லச் செல்ல ஒரு நாள் நதியானது இறுதியாகக் கடலை வந்து சேர்ந்தது. நதி தன் இலக்கைக் கண்டுபிடித்துவிட்டது, அது தான் ஆசீர்வதிக்கப்பட்டதாக உணர்ந்தது. கடலைச் சந்திப்பதே அதன் இறுதி இலக்காக இருந்தது. ஆனால் அன்று இலக்கற்றுப் பறந்து திரிந்த அக் காகத்திற்கு மட்டும் அந்நாள் மிகவும் துக்கம் நிறைந்த நாளாக மாறிப்போனது.

சிலநாட்களாக நடந்த வேடிக்கை, முடிவுக்கு வந்தது. உணவு, குடிநீர், தங்குமிடம் என எதுவும் இல்லாத இடத்திற்கு அந்த யானையின் சடலமும், அந்த நதியும் அதனை அழைத்துக் கொண்டு வந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா இடங்களிலும் எல்லையற்ற உப்பு நீர்.... அக் காகம் அலைந்து திரிந்து சலித்துப்போனது. பல நாட்களாக களைப்புடனும், பசியுடனும், தாகத்துடனும் நாலா திசைகளிலும் சிறகுகளை அசைத்து, தனது கொடூரமான குரலால் கரைந்து கொண்டிருந்தது.

கடலின் ஆழம் மற்றும் பரந்து விரிந்த மேகக்கூட்டங்கள் என அதன் முடிவற்ற திசைகளில் தேடியலைந்தது. ஆனால் கடலின் முடிவை எங்குமே காண முடியவில்லை. கடைசியில், சோர்ந்து, சோகத்தில் மூழ்கி, கடலின் அதே வானளாவிய அலைகளில் விழுந்து மடிந்தது. அப்பொழுது பெரிய சுறா ஒன்று கடலுக்குள்ளிருந்து தனது தலையைத் தூக்கி அதனை மிகவும் லாவகமாக விழுங்கியது.

ஆம் நண்பர்களே நாமும் அர்த்தமற்ற இன்பங்களை நாடி ஓடும் போது அதே காக்கையைப் போலத்தான் நகர்கின்றோம். அநித்தியமான சந்தோஷங்களையும், வசதி – வாய்ப்புக்களையும் பற்றிப்பிடித்து நாம் அழைக்கப்பட்ட அழைப்பை மறந்து சென்று கொண்டிருந்தால் ஒரு நாள் அந்த காகம் கடலுக்குள் அகப்பட்டதைப் போன்று எமது இரட்சிப்பை இழந்துவிடுவோம். எனவே மிகவும் எச்சரிப்போடு எமது வாழ்வை கொண்டு செல்வோம். **எபேசியர் 4:1 ஆதலால், கர்த்தர்நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து.**

# வினா விடை - 110

01. உன் குழந்தைகளின் பிராணனுக்காக நீ என்ன செய்ய வேண்டும்?

02. 'உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன்' என்றது யார்?

03. 'உம்முடைய நகரத்துக்கும் உம்முடைய ஜனத்துக்கும் உம்முடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறது' என்று வாசிப்பது எங்கே?

04. 'என் ஜனங்கள் என் நாமத்தை அறிவார்கள்' என்று வாசிப்பது எங்கே?

05.'இதுவரைக்கும் உம்முடைய அதிசயங்களை அறிவித்து வந்தேன்' என்று வாசிப்பது எங்கே?

06. 'தன் தேவனாகிய கர்த்தரின் நாமத்தை முன்னிட்டு ஊழியஞ்செய்வான்' அவன் யார்?

07. 'நீர் அதிசயமானவைகளைச் செய்தீர்' என வாசிப்பது எங்கே?

08. யாருடைய ஆலோசனை கவிழ்க்கப்படும்,

09. 'உம்முடைய நாமத்தை மதிப்பான்' அவன் யார்?

10. 'அப்பொழுது ..... அதிசயம் விளங்கினது' எங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீங்கள் பேதுருவைப் போல மனந்திரும்புவீர்களா?

❏ போதகர் J.K.பிலிப் அவர்களிடமிருந்து...

**மத்தேயு 7:13-14 (13.) இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். 14. ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.**

இடுக்கமான வாசலைக் குறித்தும், விசாலமான வாசலைக் குறித்தும் இப் பகுதி பேசுகிறது. என்னுடைய புரிந்து கொள்ளுதலின்படி இப்பொழுது தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைப்பவர்களில் 99.9% பேர்களும் ஏன் ஆவியில் நிறைந்த பெந்தகொஸ்தே குழுவினரும் கூட இடுக்கமான வாசல் வழியால் செல்லவில்லை என்பதே எனது கருத்து. மறுபடி பிறந்த அனைத்து கிறிஸ்தவர்களும் சிந்திக்க வேண்டிய விடயம் நான் எந்த வழியாய் செல்கின்றேன்?

**இரட்சிக்கப்பட்டும் இடுக்கமான வழியில் செல்லாதவர்கள் கீழ்க்காணும் பட்டியலில் ஒன்றை அல்லது சிலவற்றை செய்பவர்களாக இருப்பார்கள்.**

**இது முழுமையான பட்டியல் அல்ல...**

1. தங்கள் வாழ்க்கையில் பயமின்றி பொய்களை பேசுவார்கள் அத்தோடு மற்றவர்களை பொய் சொல்லத்தூண்டுவார்கள்.
2. கபடம் பேசுபவர்களாக இருப்பார்கள்.
3. ஏமாற்றுபவர்களாக இருப்பார்கள்.
4. தங்கள் பணத்தை வட்டிக்கு கொடுப்பார்கள்.
5. சரீர பிரகாரமாக ஒழுக்கமற்ற வாழ்க்கை வாழ்வார்கள்.
6. கர்த்தருக்கு முன்பாகவும் கர்த்தரின் பிள்ளைகளுக்கு முன்பாகவும் செய்த உடன்படிக்கையை மீறுவார்கள்.
7. பதிலடி கொடுப்பவர்களாக இருப்பார்கள்; அடிக்கப்படும்போது திருப்படி அடிப்பார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பழிவாங்குபவர்களாக இருப்பார்கள்.

9. கெட்ட வார்த்தைகளைப் பேசுபவர்களாக இருப்பார்கள்.

10. வீண் வார்த்தைகளை பேசுபவர்களாக இருப்பார்கள்.

11. தங்கள் வாழ்க்கையில் ஆவியின் கனி இல்லாமலேயே பரிசுத்த ஆவியானவரின் வரங்களை துணிந்து பயன்படுத்துவார்கள்.

12. மற்றவர்கள் மேல் பொய் சாட்சி சொல்பவர்களாக இருப்பார்கள்.

13. கோள் சொல்லித் திரிபவர்களாக இருப்பார்கள்.

14. மற்றவரின் குணாதிசயங்களை இழிபடுத்தும் குற்றவாளிகளாக இருப்பார்கள்.

15. தங்களுக்கென செல்வத்தைக் குவிப்பவர்களாக காணப்படுவார்கள்.

16. காணிக்கைகளில் இருந்து பணங்களை திருடுபவர்களாக காணப்படுவார்கள்.

17. கர்த்தர் ஏற்படுத்தின அதிகாரங்களுக்கு எதிராக கலகம் செய்வார்கள்.

18. வாக்குறுதிகளை மீறுவார்கள்.

19. தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டுவதற்கு பதிலாக தங்களுக்கென ஒரு பெயரை கட்டியெழுப்ப பிரயாசப்படுவார்கள்.

20. சமாதானத்தை நாடுவதற்கு பதிலாக போராடுவதற்கு முயற்சிகளை எடுப்பார்கள்; வீண் விவாதங்களை உண்டுபண்ணுவார்கள். (பிரசங்கி 7:9 மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்)

21. உடன்படிக்கையை முறிப்பவர்களுக்கு நெருங்கிய நண்பர்களாக காணப்படுவார்கள்.

22. கிறிஸ்தவ குடும்பங்களில் பிறந்திருப்பார்கள். ஆனால் அவிசுவாசிகளுடன் காதல் உறவு கொண்டிருப்பார்கள்.

23. மீண்டும் பிறந்திருந்தாலும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் தெரிந்துகொண்டே பாவம் செய்துகொண்டு திருவிருந்துகளில் பயமின்றி பங்குபற்றுவார்கள்.

24. கர்த்தருடைய வார்த்தையை கேட்பதிலிருந்து காதுகளை விலக்குவார்கள்; அல்லது தேவ வார்த்தைகளை கேட்பதை தவிர்த்துக் கொள்வார்கள்.

25. சட்டவிரோதமான வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்வார்கள்; சட்டவிரோதமாக செல்லும் நபர்களை ஊக்குவிப்பார்கள். அல்லது அவர்களுக்கு உதவியாக இருப்பார்கள். அத்தோடு இப்படிப்பட்ட காரியங்களை சபைத்தலைவர்களுக்கு மறைப்பவர்களாக காணப்படுவார்கள்.

26. கர்த்தருக்கு முதலிடம் கொடுப்பதற்கு பதிலாக இவ்வுலகக்காரியங்களுக்கு முதலிடம் கொடுப்பார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. தங்கள் பெற்றார்களுக்கும் தேவபயமுள்ள தலைவர்களுக்கும் மதிப்புக் கொடுக்காமல் கீழ்ப்படியாமை உள்ளவர்களாக காணப்படுவார்கள்.

28. கணவனை மதிக்காத மனைவிகளாக காணப்படுவார்கள்.

29. நியாய விசாரணைக்காக பரிசுத்தவான்களிடம் செல்லாமல் அநீதக்காரரிடத்தில் செல்வார்கள்.

30. மறைமுகமான நோக்கங்களை உள்ளே வைத்துக் கொண்டு நேர்மையற்ற அறிக்கைகளை விடுவார்கள்.

31. தேவ வார்த்தையைக் குறித்து முணுமுணுப்பார்கள். அத்தோடு கிசுகிசுப்பவர்களாக இருப்பார்கள்.

**நீங்கள் எந்தப் பாதையில் செல்கிறீர்கள்? என்பதை ஆராய்ந்து பாருங்கள்.**

**லூக்கா 22:54-62 (54.) அவர்கள் அவரைப் பிடித்தபின்பு, பிரதான ஆசாரியனுடைய வீட்டில் கொண்டுபோய் விட்டார்கள். பேதுருவும் தூரத்திலே பின்சென்றான். 55. அவர்கள் முற்றத்தின் நடுவிலே நெருப்பை மூட்டி, அதைச் சுற்றி உட்கார்ந்தபோது, பேதுருவும் அவர்கள் நடுவிலே உட்கார்ந்தான். 56. அப்பொழுது ஒரு வேலைக்காரி அவனை நெருப்பண்டையிலே உட்கார்ந்திருக்கக்கண்டு, அவனை உற்றுப்பார்த்து: இவனும் அவனோடிருந்தான் என்றாள். 57. அதற்கு அவன்: ஸ்திரீயே, அவனை அறியேன் என்று மறுதலித்தான். 58. சற்றுநேரத்துக்குப்பின்பு வேறொருவன் அவனைக் கண்டு: நீயும் அவர்களில் ஒருவன் என்றான். அதற்குப் பேதுரு: மனுஷனே, நான் அல்ல என்றான். 59. ஏறக்குறைய ஒருமணி நேரத்துக்குப்பின்பு வேறொருவன் அவனைப்பார்த்து: மெய்யாகவே இவனும் அவனோடிருந்தான், இவன் கலிலேயன் தான் என்று சாதித்தான். 60. அதற்குப் பேதுரு: மனுஷனே, நீ சொல்லுகிறதை அறியேன் என்றான். அவன் இப்படிச் சொன்னவுடனே சேவல் கூவிற்று. 61. அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார். சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து, 62. வெளியே போய், மனங்கசந்து அழுதான்.**

இந்த வேதப்பகுதியில் பேதுருவின் மறுதலிப்பைக் குறித்து காண்கிறோம். இது அவரால் முன்கூட்டியே திட்டமிடப்படவில்லை. ஆனால் தன் உயிரைக் காப்பாற்ற இயேசுவை மறுதலித்தார். **கர்த்தர் திரும்பி பேதுருவை பார்த்தார்** என 61ஆம் வசனம் கூறுகின்றது.

62ஆம் வசனம் பேதுரு வெளியே சென்று கதறி அழுதார் என்று சொல்கிறது. இதனை வாசிக்கின்ற நீங்கள் விசாலமான பாதையிலா? அல்லது இடுக்கமான பாதையிலா? பயணிக்கிறீர்கள்? ஆனாலும் நீங்கள் விசாலமான வழியில் செல்ல திட்டமிட்டிருக்கவில்லை என்பது உண்மைதான். இருப்பினும் நீங்கள் அழிவிற்கு வழிவகுக்கும் அகன்ற பாதையில் நிற்கிறீர்கள் என்பதை உங்களிடம் உணர்த்துவிக்கவிரும்புகிறேன. இயேசு தமது விலைமதிப்பற்ற வார்த்தையின் மூலம் இன்று உங்களைத் திரும்பி பார்க்கிறார். **நீங்கள் பேதுருவைப் போல மனந்திரும்புவீர்களா....?**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழ்மை தரமானதைத் தரும்



❑ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் அனல் வாசகர்களுக்கு வாழ்த்துக்கள்! இந்த ஆண்டின் நடுப்பகுதிக்குள்ளாக வந்திருக்கின்றோம். பலவிதமான போராட்டங்களுக்கும், பிரச்சனைகளுக்கும், குழப்பான சூழ்நிலைகளுக்கும், இழப்புகளுக்கும் நாம் முகங்கொடுத்திருந்தாலும் கூட **நாம் விசுவாசிக்கின்ற ஒன்றான மெய் தேவனாகிய இயேசு கிறிஸ்து நம்மோடு கூட இருந்தார், இப்பொழுதும் இருக்கிறார், இனியும் எம்மோடு கூடவே இருப்பார் ஆமென்!.**

எம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் நன்மையான ஆசீர்வாதங்கள் எம் தாழ்மையின் அளவேயாகும். பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்.

**மத்தேயு 15:21-28 (21.) பின்பு, இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தீரு சீதோன் பட்டணங்களின் திசைகளுக்குப் போனார். 22. அப்பொழுது, அந்தத் திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்தி அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லிக் கூப்பிட்டாள். 23. அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து: இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள். 24. அதற்கு அவர்: காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல வென்றார். 25. அவள் வந்து: ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும் என்று அவரைப் பணிந்துகொண்டாள். 26. அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார். 27. அதற்கு அவள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள். 28. இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்.**

25ஆவது வசனம் 'அவள் இயேசுவைப் பணிந்து கொண்டாள்' என்று சொல்கிறது. அதாவது பாதத்தில் விழுந்தாள் என்பது பொருள்.

ஆம் அன்பான சகோதர சகோதரிகளே நாமும் நம்முடைய வாழ்க்கையின் வியாதி சுகமாக வேண்டும் என்பதற்காக, பொல்லாத சாப கட்டிலிருந்து, பிசாசின் பிடியிலிருந்து, கடன் பிரச்சினையிலிருந்து, பிள்ளைகளுடைய பின்மாற்றமான வாழ்க்கை மாறவேண்டும் என்பதற்காக, கணவனுடைய சுடாத பழக்கவழக்கங்கள் மாற வேண்டுமென... இப்படி பலதரப்பட்ட காரியங்களுக்காக தேவனிடத்தில் வருகிறோம். இது நல்ல காரியம்.

அந்த ஸ்திரீக்காக சீஷர்கள் வேண்டியதைப் போல எங்களுடைய நிலைமையைப் பார்த்தும் பலர் எங்களுக்காக ஜெபிக்கலாம், மனதுருகலாம். ஆனால் **எப்பொழுது ஸ்திரீ இயேசுவின் கால்களில் விழுந்தாளோ அப்பொழுது தான் இயேசு அவளோடு பேச ஆரம்பித்தார்.**

நாம் நிமிர்ந்து நிற்கும் **வரைக்கும் எவ்விதமான நன்மையும் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியாது. ஆகவே அவருடைய பாதத்தில் விழுவோம். பெருமையான** பேச்சுக்கள், பார்வைகள், பிரதிபலிப்புக்கள், கொள்கைகளை அகற்றி நான் ஒன்றுமில்லை எனும் நிலைமை தான் இயேசு எம்மோடு பேசும்படியான சூழ்நிலையைக் கொண்டுவரும்.

விழுந்த பெண்ணைப் பார்த்து இயேசு மறைமுகமாக 'நாய்க்குட்டி' என்று ஒப்பிடுகிறார்.

27ஆம் வசனம்: அவள் சொல்கிறாள்; 'மெய்தான் ஆண்டவரே' அப்படியென்றால் நான் நாய் தான் ஆண்டவரே என்று. இது தான் உண்மையான தாழ்மை. **தேவன் நம்மை எப்படி பார்க்கிறாரோ அப்படி நம்மை உணர்வதே தாழ்மை.**

ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேசையிலிருந்து விழும் துணிக்கைகளை தின்னுமே என்றாள்.

ஆம்பிரியமானவர்களே, தாழ்மையுள்ள மனம் **<u>'அவள் விரும்பியதை அவளுக்கு கொண்டு வந்தது'.</u>**

இயேசுவின் தாயாகிய மரியாள் சொல்கிறாள்;

**லூக்கா 1:48-52 (48.) அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார்; இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள். 49. வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது. 50. அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்குமுள்ளது. 51. தம்முடைய புயத்தினாலே**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பராக்கிரமஞ்செய்தார்; இருதயசிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார். 52. பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார்.**

நாமும் நம்முடைய வாழ்க்கையில் தேவனால் நோக்கிப் பார்க்கப்பட, அவராலே உயர்த்தப்பட நம்மை தாழ்த்துவோம்; தாழ்மை நம்மை தரமுள்ளவர்களாக மாற்றும்.

**பிலிப்பியர் 2:6 அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் (அதாவது அவர் தேவனாக இருந்தும்)**

**பிலிப்பியர் 2:8 அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்.**

ஆம் நம் இரட்சகர் இயேசுவே பூமியில் தம்மை பூரணமாக தாழ்த்தினார். ஏனெனில் பிதாவின் சித்தம் விருப்பம் அது தான். அது ஒன்றேதான்.

தாழ்மைப்பட்ட அல்லது தாழ்த்தின இயேசுவை பிதா எப்படி கனப்படுத்தினார் தெரியுமா?

**பிலிப்பியர் 2:9 ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,**

ஆம் அன்பானவர்களே இன்று வரை நாமும் எமக்காக ஜெபிக்கிறோம். மற்றவர்களும் எமக்காக வேண்டுகிறார்கள். ஆனால் பதிலில்லை என்று நொந்து போய் இருக்கிறீர்களா? இன்றைக்கு உங்களை தாழ்த்துங்கள். இதய பூர்வமாக, கிரியையினாலும் தாழ்மைப்படுத்துங்கள். நாளைக்கு தேவன் அற்புதம் செய்வார்.



**குறுக்கெழுத்துப் போட்டி – 107 சரியான பதில்கள்**

**இடமிருந்து வலமாக**

02. அத்தாளியாளை – 11இராஜா 11:15
05. மிரியாம் – எண் 13:10
07. தாழ்ந்த – நீதி 11:2b
10. அபியாள் – 11நாளா 29:1
12. அக்சாள் – நியாயா 1:15

**வலமிருந்து இடமாக**

04. ஆதார் – எஸ்தர் 9:21
06. ஞானம் – நீதி 14:33
09. கற்பனை – சங்கீதம் 19:8b
11. கேதுருமரங்களை – 11நாளா 9:27
13. சாமுவேல் – 1சாமு 12:23

**மேலிருந்து கீழாக**

01. இஸ்போசேத் – 11சாமு 4:9
02. அம்மினதாப் – 1நாளா 2:10
03. சீரியோன் – உபா 3:9

**கீழிருந்து மேலாக**

08. எஸ்றா – எஸ் 9:4
11. கேடகமானவர் – நீதி 30:5
13. சாலொமோன் – 1இராஜா 1:52


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | 02 |
| | 04 | | | | | | 03 | |
| | | | | 05 | | | | |
| | | | | | | | | 06 |
| | | 07 | | | 08 | | | |
| | | | | 09 | | | | |
| | | | | | | | | 10 |
| | | | 11 | | | | | |
| 12 | | | | | | | | 13 |

## இடமிருந்து வலமாக

# குறுக்கெழுத்துப் போட்டி 108

01. 'நன்மையும் செவ்வையுமான வழியை உங்களுக்குப் போதிப்பேன்' என இஸ்ரவேலரிடம் கூறியவன்
05. இவன் இரத்தப்பழியை ரேகாப் மற்றும் பானாவின் மேல் வாங்குவேன் என்று தாவீது கூறினான்
08. ஆசா தன் தாயின் விக்கிரகத்தை இந்த ஆற்றண்டையில் சுட்டெரித்தான்
09. ................. பொய்ப்பேச்சை வெறுக்கிறான்
11. ஆவியின் கனிகளில் ஒன்று
12. ஈசாயின் இரண்டாம் குமாரன்

## வலமிருந்து இடமாக

02. 'கர்த்தருடைய வார்த்தையை இன்றைக்கு விசாரித்து அறியும்' என்று ஆகாபிடம் கூறியவன்
03. பார்வோனின் பட்டயத்துக்கு தேவன் என்னைத் தப்புவித்தார் என்று மோசே தன் குமாரனுக்கு இவ்வாறு பெயரிட்டான்
06. காபிரியேலுக்கு முன்பாக அயர்ந்த நித்திரை கொண்டவன்
10. கர்த்தருடைய ........... உத்தமமும், அவருடைய செய்கையெல்லாம் சத்தியமுமாயிருக்கிறது
13. மனுஷனுடைய விவேகம் அவன் கோபத்தை அடக்கும்; குற்றத்தை மன்னிப்பது அவனுக்கு........

## மேலிருந்து கீழாக

01. இவன் அபியத்தாருடன் தேவனுடைய பெட்டியை எருசலேமுக்கு திரும்பக் கொண்டு சென்றான்
02. மேரிபாலின் அப்பா
04. இவளை பின்பற்றுகிறவனை பட்டயத்தால் வெட்டிப்போடும்படியாய் யோய்தா கூறினான்
07. இஸ்ரவேலின் கடைசி ராஜா

## கீழிருந்து மேலாக

07. இஸ்ரவேலர் கானானியரின் பட்டணங்களை சங்காரம் பண்ணி அவ்விடத்திற்கு இவ்வாறு பெயரிட்டனர்
11. தன் கண்களை ஏழைகளுக்கு விலக்குகிறவனுக்கோ அநேக ....... வரும்
12. 'நீ ராஜ்யத்தில் பாதி மட்டும் கேட்டாலும், உனக்கு கொடுக்கப்படும்' என எஸ்தரிடம் கூறியவன்
13. 'நாம் தேவனைக் கண்டோம், சாகவே சாவோம்' எனக் கூறியவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிம்சோன் Samson

❒ போதகர் வை.தேவதாஸ்




கிறிஸ்துவுக்குள் அன்பான அனல் சஞ்சிகை வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். நீங்கள் கர்த்தருக்குள் சுகமாக இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன்.

**மேலும் கடந்த நாட்களிலும், இந் நாட்களிலும் எமது தேசத்தில் நிலவிவருகின்ற பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் தேவன் தமது மிகுந்த கிருபைகளினால் எங்களைத் தாங்கி வருகின்றார். அவர் நம்மை பராமரிக்கும் தேவனாகவும்; எங்களைப் பாதுகாக்கும் தேவனாகவும் இருப்பதினால் அவருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.**

வாசகர்களே! இச் சஞ்சிகையானது உங்கள் கரங்களில் கிடைக்கும் பொழுது ஏனோதானோவென்று அவசரம் அவசரமாக தலையங்கங்களை மாத்திரம் வாசித்துவிட்டு சஞ்சிகையை மூடிச்செல்லாமல் பொறுமை யாக இருந்து வாசிக்கும்படி தயவுடன் வேண்டுகிறேன்.

சிலர் இதனை கவனமாக வாசிப்பதினால் தங்கள் வாழ்வில் அனேக மாற்றங்களைப் பெற்றுள்ளனர் என்பதைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். எனவே நீங்களும் கொஞ்சம் கருத்தூன்றிப் படியுங்கள். நீங்கள் படித்த பின்பு அச் சஞ்சிகையை இன்னொருவர் வாசிக்கும்படி கொடுத்து உற்சாகப்படுத்துங்கள்.

ஏனெனில் தவறான காரியங்களை வாசிக்கும்படி பிசாசானவன் பல வழிகளில் செயற்படுகின்றான். நாமோ தேவனுடைய வார்த்தைகளை மற்றவர்கள் வாசிக்கும்படி பிரயாசப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வாலிபர் பகுதியில் சிம்சோனின் வாழ்க்கையைக் குறித்த சத்தியங்களை தியானித்து வருகின்றோம். சிம்சோனைக் குறித்த வேதபாடத்திற்குள் செல்வதற்கு முன்பதாக பரிசுத்த வேதாகமத்தில் இருந்து ஒரு வாக்குத்தத்தத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

வேதாகமம் சொல்கின்றது, **யாத்திராகமம் 14:13-14 (13.) பயப்படாதிருங் கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். 14. கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்.**

எல்லோருக்கும் மிகவும் பரீட்சயமான வேதப்பகுதியாக இவ் வசனம் இருந்தாலும் இன்றைக்கும் இவ் வசனத்தின் மூலம் தேவன் உங்களை பலப்படுத்தவிரும்புகிறார்.

தேவ ஜனங்களுக்கு பின்பதாக பார்வோனின் படைகள் அணிவகுத்து வந்தன. அவ்வேளையில் கர்த்தர் இவ் வசனத்தைக் கூறுகின்றார். ஆம் பிரியமான தேவ பிள்ளைகளே, இன்றும் உங்களுக்கு பின்பதாக பலவிதமான பிரச்சினைகள் அணிவகுத்து நிற்கலாம். வியாதி என்கிறதான துன்பம் எகிப்திய படைகளைப் போல் உங்கள் பின் அணிவகுத்து நிற்கின்றதா? பணப்பிரச்சினையிலிருந்து மீள முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறீர்களா? தற்போதைய நாட்டு சூழ்நிலையில் எதற்கெடுத்தாலும் குறிப்பாக எரிபொருளுக்காக நீண்ட வரிசைகளைக் காண்கிறோம். அதனைப் போல் உங்கள் வாழ்க்கையிலும் உங்கள் பின்பதாக தேவைகள், பிரச்சினைகள் என்பன உங்களால் சமாளிக்க முடியாத அளவிற்கு ஒன்றன்பின் ஒன்றாக சூழ்ந்து கொண்டு நிற்கின்றதா? **கவலைப்படாதிருங்கள்!**

இப்படிப்பட்டதான சிக்கல்கள், போராட்டங்கள், பயம் தரும் சூழ்நிலைகள் போன்ற இந் நேரங்களில் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள். நிச்சயம் அவர் உங்கள் எல்லாப் பிரச்சினைகளிலிருந்தும் உங்களை மீட்டு காப்பாற்றுவார். நிச்சயம் ஆண்டவர் உங்களுக்கு தந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார். அவர் உங்களை கைவிடவேமாட்டார். உங்களால் முடியாது என்ற நிலைக்கு நீங்கள் தள்ளப்பட்டிருக் கின்றீர்கள் என்பது ஆண்டவருக்குத் தெரியும். **உங்களால் முடியாத நேரத்தில் நிச்சயம் ஆண்டவர் உங்களுக்கு உதவி செய்வார்.**

இவ் அனல் சஞ்சிகையை வாசிக்கின்ற சகோதரனே, சகோதரியே நீங்கள் யாராக இருந்தாலும் உங்களுக்கு தேவ சமூகத்தில் இருந்து ஒன்றை சொல்ல விரும்புகின்றேன். **பயப்படாதிருங்கள்! கர்த்தருடைய உதவி உங்களுக்கு நிச்சயம் கிடைக்கும். நீங்கள் செங்கடலில் மூழ்கிப் போவதுமில்லை, எகிப்திய சேனையிடம் அகப்படுவதுமில்லை. கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்** - ஆமென்.

தொடர்ந்தும் சிம்சோனின் வாழ்வைக் குறித்த வேத பாடத்திற்குள் செல்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிம்சோனின் விழுகைக்கான முதலாவது காரணம்; 'அவரது பிரயாணங்களே' என்பதை நாம் பார்த்து வருகின்றோம். பெரும்பாலும் அவரது பிரயாணங்கள் அவரது மாம்ச இச்சையை நிறைவேற்றுவதிலேயே முடிந்துள்ளது.

சிம்சோனைப் போலவே புத்திகெட்ட வாலின் ஒருவன் செய்த பிரயாணமும் பாவத்தில் முடிந்தது மட்டுமல்லாது அது அவனது உயிரையும் பறித்த காரியங்களை கடந்த இதழில் உங்களோடு பகிர்ந்து கொண்டேன். அவ் வாலிபனைச் சந்தித்த விபச்சாரகுணமுள்ள பெண்ணின் சுபாவங்களைக் குறித்து சற்று விளக்கமாக கடந்த இதழில் பார்த்தோம். இதுவரை நீங்கள் சென்ற மாத அனல் சஞ்சிகையை வாசிக்காதுவிட்டால் எப்படியாவது அதனைப் பெற்று நீங்கள் வாசிக்கும்படி உங்களை உற்சாகப்படுத்துகின்றேன்.

கடந்த இதிழில் கூறியிருந்தபடியே இவ் இதழிலும் புத்தியீன வாலிபன் செய்த சில பிழைகளைக் குறித்து உங்களுடன் பேச விரும்புகின்றேன். இப்படிப்பட்டதான தவறுகள் உங்கள் வாழ்க்கையில் இருக்குமானால் இன்றே இந்தத் தவறுகளைத் திருத்திக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்.

வாலிபப் பராயம் மிகவும் அவதானமாக கடக்க வேண்டிய பராயம் ஆகும். வாலிப வயதில் செய்யும் தவறுகள் எதிர்காலத்தில் பலத்த தாக்கத்தை உண்டு பண்ணும். எனவே வாலிபர்களே நீங்கள் இவ் வேதாகம சத்தியங்களை வாசிக்கும்பொழுது அதனைக் கொண்டு உங்கள் வாழ்க்கையை சீர்படுத்துங்கள். அதுவே உங்களுக்கு ஆசீர்வாதம்.

புத்தியீன வாலிபன் செய்த பிழையான செயல்களைப் பார்ப்போம்.

## 01. பாவ சோதனை நிறைந்த வழியாக தனிமையில் நடந்து போனான்.

**நீதிமொழிகள் 7:9 அவள் இருக்கும் சந்துக்கடுத்த தெருவில் சென்று, அவள் வீட்டுவழியாய் நடந்துபோனான்.**

**வாலிபர்களே எந்த வழியாய் போகிறோம் என்பதை நாம் அவதானிக்க வேண்டும்.** இந்த வாலிபன் பயணித்த நேரம் மாலை மயங்கும் நேரமாகும். அப்படியானால் அவன் சென்ற நேரமும் பிழையானது. நேரம் தான் பிழையென்றாலும் அவன் சென்ற வழியைக் குறித்து சற்று சிந்தித்துப்பாருங்கள். அதாவது அவள் வீட்டு வழியாய் நடந்து போனான்.

பிழையான நேரத்தில் பிழையான வழியில் அவனது பிரயாணம் அமைவதனைப் பார்க்கிறோம். மிக மோசமான தெருவில் தனிமையில் அவனது பிரயாணம் அமைவதனைப் பார்க்கிறோம்.

**ஆதியாகமம் 34:1 லேயாள் யாக்கோபுக்குப் பெற்ற குமாரத்தியாகிய தீனாள் தேசத்துப் பெண்களைப் பார்க்கப் புறப்பட்டாள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீனாள் எனும் இப் பெண்ணிற்கு நிறையவே ஆண் சகோதரர்கள், உறவுகள் என பெரிய பட்டாளமே உண்டு. இருப்பினும் இவ் வாலிபப்பெண் தெரியாத ஓர் புதிய இடத்திற்கு தனிமையாக செல்வதைப் பார்க்கிறோம். தனிமையாக அவள் சென்றதன் விளைவு; **ஆதியாகமம் 34:2 அவளைக் கொண்டுபோய், அவளோடே சயனித்து, அவளைத் தீட்டுப்படுத்தினான்.** தன் கற்பை பறிகொடுத்தாள்.

பிரியமான வாலிபர்களே! சுற்றுலா என்றும் விடுமுறை என்றும் கூறிக்கொண்டு தெரியாத இடங்களுக்கெல்லாம் செல்வதனை தவிர்த்துக் கொள்ளுங்கள். தயவு செய்து வாலிப வயதில் தனிமையான பயணங்களை தவிர்த்துக் கொள்ளுங்கள். அத்தோடு எதிர்பாலாரோடு தனிமையில் நேரம் செலவிடுவதனை குறைத்துக் கொள்ளுங்கள். தேவையில்லாத பிரயாணங்களில் சிக்கிக் கொள்ளாதிருங்கள். உங்கள் குடும்பத்தையும் வீண் துக்கத்திற்குள் வழிநடத்தாதிருங்கள்.

## 02. வாலிப உணர்வுகளைத் தூண்டும் இச்சையான வார்த்தைகளைக் கேட்கும்படி நின்றான்

**நீதிமொழிகள் 7:13-21 (13.) அவள் அவனைப் பிடித்து முத்தஞ்செய்து, முகம் நாணாமல் அவனைப்பார்த்து: 14. சமாதான பலிகள் என்மேல் சுமந்திருந்தது, இன்றைக்குத்தான் என் பொருத்தனைகளை நிறைவேற்றினேன். 15. ஆதலால், நான் உன்னைச் சந்திக்கப் புறப்பட்டு, உன் முகத்தை ஆவலோடு தேடினேன்; இப்பொழுது உன்னைக் கண்டுபிடித்தேன். 16. என் மஞ்சத்தை இரத்தின கம்பளங்களாலும், எகிப்துதேசத்து விசித்திரமான மெல்லிய வஸ்திரங்களாலும் சிங்காரித்தேன். 17. என் படுக்கையை வெள்ளைப்போளத்தாலும் சந்தனத்தாலும் இலவங்கப்பட்டையாலும் வாசனை கட்டினேன். 18. வா, விடியற்காலம்வரைக்கும் சம்போகமாயிருப்போம், இன்பங்களினால் பூரிப்போம். 19. புருஷன் வீட்டிலே இல்லை, தூரப் பிரயாணம் போனான். 20. பணப்பையைத் தன் கையிலே கொண்டுபோனான், குறிக்கப்பட்ட நாளிலே வீட்டுக்கு வருவான் என்று சொல்லி, 21. தன் மிகுதியான இனிய சொற்களால் அவனை வசப்படுத்தி, தன் உதடுகளின் மதுரவாக்கினால் அவனை இணங்கப் பண்ணினாள்.**

இவ் வசனங்களைப் படிக்கும்பொழுது இவ் வாலிபன் அவளுடைய சொற்களை கேட்கும்படி தரித்து நிற்பதனை காண்கிறோம். ஆரம்பத்திலேயே தப்பி ஓடுவதற்கு சந்தர்ப்பம் இருந்தும் அவன் தனது வறட்டுத் துணிவில் அவள் சொல்லும் இச்சகமான வார்த்தைகளுக்கு செவிகொடுப்பதனைக் காண்கிறோம்.

இந் நாட்களிலும் வாலிப உணர்வுகளைத் தூண்டும் ஆபாச வார்த்தைகளைப் பேசுவோர் பெருகிவிட்டனர். ஆபாச வார்த்தைகளால் மயக்கி எதிர்பாலரிடம் பணம், பொருள், உடமைகள் என்பவற்றை திருடும் வழக்குகள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிப பருவத்தில் அசுத்தமான நூல்களை வாசிப்பதில் இருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். அத்தோடு அசுத்தமான பாடல்கள், படங்கள் போன்றவற்றை அறவே உங்கள் வாழ்விலிருந்து நீக்கிவிடுங்கள். பிழையான நண்பர்களின் நட்பை முறித்துக் கொள்ளுங்கள்.

ஒரு சில மணித்துளிகள் கிடைக்கும் சிற்றின்பத்தைப்பற்றி மட்டும் சிந்திக்காமல் பிற்காலத்தில் அதின் மோசமான விளைவுகளையும் சிந்தித்துப்பாருங்கள்.

அன்றைய நாட்களில் வாழ்ந்த ஒரு சில சிலைவழிபாட்டோடு தொடர்புடைய மக்கள் விபச்சாரத்தை ஓர் சமயச்சடங்காக நினைத்து அதனை அனுசரித்து வந்துள்ளனர். இதனை வைத்துக் கொண்டு அவ் விபச்சாரப்பெண் தான் செய்யப்போவதும் பாவமல்ல என்ற எண்ணத்தை அவனுக்குள் புகுத்திக் கொண்டிருந்தாள்.

**நீதிமொழிகள் 7:14 சமாதான பலிகள் என்மேல் சுமந்திருந்தது, இன்றைக்குத்தான் என் பொருத்தனைகளை நிறைவேற்றினேன்.**

தான் செய்யப்போவது பொருத்தனையின் நிறைவேறுதலே என்பது போல் பேசினாள். அவள் இவ்வளவாய் பேசும்போது இவன் புத்திகெட்டவனாக அவை அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்தான். உண்மையில் அவன் அவ்வளவு கதைகளையும் கேட்டதற்கு அவ்வளவு நேரம் அதில் நிற்கவேண்டிய அவசியமில்லை. இருப்பினும் அவ் ஆசை வார்த்தைகளில் மயக்கமுற்றவனாய் அவ் இடத்தில் அவன் நின்றான்.

தவறான பாதையில் போனது மட்டுமல்லாது தவறான வார்த்தைகளைக் கேட்கும்படியும் தனது நேரத்தை செலவிட்டான்.

**11தீமோத்தேயு 2:22 அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி,**

பாலியத்திற்குரிய இச்சைகளை எதிர்த்துப்போராடு என இப்பகுதி சொல்லாமல் பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடு என்றே இப் பகுதி சொல்கின்றது.

எதிர்த்துப்போராடாமல் விலகியோட வேண்டிய சூழ்நிலையும் உண்டு. இச்சை தரக்கூடிய சூழ்நிலைகளை விட்டுவிலகி ஓடுங்கள். அவ்வாறு நீங்கள் ஓடுவதால் கோழைகளாக மாறமாட்டீர்கள். மாறாக அந்த சூழ்நிலைகளை வெறுத்து வெளியே வருகின்றீர்கள் என்பதனை மறந்துவிடாதீர்கள்.

எனவே வாலிபர்களே உங்கள் வாலிப உணர்வுகளைத் தூண்டும் சூழ்நிலைகளைவிட்டு வெளியே வாருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. ஆசை வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு அவள் சொன்னதற்கு இணங்கிப் போனான்.

வேதாகமம் சொல்கிறது, **நீதிமொழிகள் 7:22 உடனே அவன் அவள் பின்னே சென்றான்.**

ஒரு வேசியின் அழைப்பை ஏற்றுக்கொண்ட வாலிபன் அவள் பின்னே போனான். **இன்றும் நீங்கள் யார் பின்னால் சென்று கொண்டிருக்கிறீர்கள்?**

இந்த வாலிபன் வேசியின் அழைப்பை ஏற்று அவள் பின்னே செல்வதை வேதாகமம் மூன்று உவமைகளில் விபரிக்கின்றது.

'கொல்லப்படும்படி செல்கின்ற மாடு', 'விலங்கிடப்பட்டுத் தண்டனைக்குச் செல்லும் மூடன்', 'தன்னை கொல்வதற்காக வைக்கப்பட்டுள்ள கண்ணியில் விழுவதற்காக விரைந்தோடும் குருவி'

என்ற இந்த மூன்றும் எவ்வளவு பரிதாபமான நிலையைக் குறிக்கின்றது என்பதை சிந்தித்துப்பாருங்கள்.

ஆசை வார்த்தைகளுக்கு இணங்கிப்போனவனின் முடிவையும் தியானித்துப் பாருங்கள். **நீதிமொழிகள் 7:23 அம்பு அவன் ஈரலைப் பிளந்தது.**

பாலியல் பாவங்கள் மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும். பாலியல் தொடர்புபட்ட செயல்கள் ஆரம்பத்தில் விளையாட்டுத்தனமான இன்பங்களைக் கொடுத்தாலும் முடிவில் அது நமது சமாதானத்தை மட்டுமல்ல நமது ஜீவனையே எடுத்துவிடும் என்பதை மறக்க வேண்டாம்.

எனக்கு அருமையானவர்களே! உங்கள் பிரயாணங்களைக் குறித்து சற்று விழிப்படையும்படிக்கே இவ் வேதாகம சத்தியங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். எமது பிரயாணங்களை பாவத்தை இலக்கு வைத்து மேற்கொள்ளக் கூடாது. **நியாயாதிபதிகள் 18:6 உங்கள் பிரயாணம் கர்த்தருக்கு ஏற்றது.**

கர்த்தருக்கு ஏற்றபடி எமது பிரயாணங்கள் அமைய வேண்டுமேயல்லாமல் சாத்தானிற்கு ஏற்றபடி அமையக்கூடாது. சிம்சோன் தனது உடல் ஆசைகளை நிறைவேற்றவே பெரும்பாலான பிரயாணங்களை மேற்கொண்டார். அது போல நாமும் செய்யாதபடிக்கு கர்த்தருக்கு ஏற்ற பிரயாணங்களை மேற்கொள்வோம். நமது பிரயாணங்களில் தேவ சமூகம் நம்மோடு கூட வரும்படியாக வாஞ்சிப்போம்.

**எண்ணாகமம் 9:18 கர்த்தருடைய கட்டளையின்படியே இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்படுவார்கள்.**

எவ்வளவு அருமையான வார்த்தை. எமது பிரயாணங்களும் கர்த்தருடைய கட்டளையின்படியே இருக்க முழு முயற்சி எடுப்போம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❑ திருமதி. J.பிலிப்




**இ**யேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! தேவ கிருபையினால் எல்லா இக்கட்டில் இருந்தும் தேவன் நம்மை பாதுகாத்து வழிநடத்தி வருகிறார். கடந்த நாட்களில் வியாதி என்னும் இக்கட்டு, கடன் தொல்லை என்னும் இக்கட்டு என்பவற்றைக் குறித்துப் பார்த்தோம். இம் முறை நாம் **'குடும்ப பிரச்சினை என்னும் இக்கட்டில் இருந்து நாம் எப்படி விடுதலை பெறமுடியும்'** என்பதைக் குறித்து ஆராய்ந்து பார்ப்போம்.

சகோதரிகளே! சொல்வதற்கு மிகவும் துக்கம். **கிறிஸ்தவ குடும்பங்கள் கூட குடும்ப பிரச்சினை என்னும் இக்கட்டுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.** ஒருவேளை நீயும் குடும்ப பிரச்சினை என்ற இக்கட்டிற்குள் வாழ்ந்து கொண்டு வெளியே வரமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறாயா? உன் தேவன் உன் இக்கட்டில் இருந்து உன்னை விடுதலை செய்ய ஆயத்தமாய் இருக்கிறார். நீ அவருடைய வார்த்தையின்படி வாழ ஆயத்தமா? அப்படியா னால் பொறுமையுடன் இதை வாசிப்பாயா?

**முதலாவது உன் குடும்பம் உனக்கு தேவனால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை நீ உன் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.** கணவன், பிள்ளைகள் உனக்கு தேவன் கொடுத்த வர்கள் என்பதை விசுவாசிக்க வேண்டும். முதலாவது உன் குடும்பத்திற்கு தலைவன் **இயேசு கிறிஸ்து.** அடுத்து தேவன் உனக்கு கொடுத்த **கணவன்.** கிறிஸ்தவ வீடுகளில் ஒரு அழகான வசனம் இருக்கும். **'இயேசுவே இவ் வீட்டின் தலைவர் *(Christ is the head of this house).'***

ஆனால் சில வீடு களில் நடைபெறும் காரியங் களைப் பார்க்கும் போது அவ் வீட்டின் தலைவன் மனைவி அல்லது பிள்ளைகளாய் இருப் பார்கள். அவ் வீட்டில் இயேசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுக்கோ அல்லது அவருடைய வார்த்தைக்கோ இடம் இருப்பதில்லை. வசனம் மட்டும் வீட்டில் பெரிதாக தொங்கவிடப்பட்டிருக்கும். கணவன் - மனைவி ஒருவருடன் ஒருவர் பேசுவதில்லை. குடும்ப ஜெபம் இருப்பதில்லை. பிள்ளைகள் தங்களுடைய தீர்மானத்தின்படி நடப்பார்கள். **இப்படிப்பட்ட வீட்டில் இயேசு எப்படி தலைவனாக இருக்க முடியும்?.**

குடும்பத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் மற்றவர்களை கனப்படுத்த வேண்டும். வேதம் அழகாக சொல்கிறது, **கனப்படுத்துவதில் முந்திக் கொள்ளுங்கள் (ரோமர் 12:10b)** கணவன் மனைவியை கனப்படுத்த வேண்டும்; மனைவி கணவனைக் கனப்படுத்த வேண்டும்; பிள்ளைகள் பெற்றோரைக் கனப்படுத்த வேண்டும். ஒருவரை ஒருவர் கனப்படுத்துவதை அனேகர் தரக்குறை வாக நினைப்பதினால் இன்று அனேக குடும்பங் களில் தற்கொலை, விவாகரத்து, பிரிந்து வாழ்வது, மறுமணம் செய்வது இப்படிப்பட்ட பல காரியங்கள் நடைபெறுகின்றது. துக்கமான காரியம் இவை கிறிஸ்தவ குடும்பங்களில் கூட நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவைகளைச் செய்வதற்கு இன்னும் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார் கள். ஆனால் வேதம் ஒரு போதும் இதற்கு இடம் கொடுக்கவில்லை. **தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார் (மத்தேயு 19:6b).**

குடும்பத்தில் இருக்கும் ஒவ்வொருவருக் கும் ஒவ்வொரு ஸ்தானங்கள் உண்டு. கணவன், தகப்பன், மனைவி, தாய், பிள்ளைகள் என்ற ஸ்தானங்கள் உண்டு. இந்த ஸ்தானங்களில் உள்ளவர்கள் வேதம் அவர்களுக்கு கொடுக்கும் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும். **புருஷர் களே மனைவியில் அன்புகூருங்கள். மனைவிகளே கணவனுக்கு கீழ்ப்படியுங்கள். (எபேசியர் 5:25, எபேசியர் 5:22) பிள்ளைகளே பெற்றோருக்கு கீழ்ப்படியுங்கள் (எபேசியர் 6:1). பிதாக்களே பிள்ளைகளை கோபப்படுத்தாதிருங்கள் (எபேசியர் 6:4).**

இந்த தேவ ஆலோசனைகளின்படி ஒரு குடும்பம் வாழ ஆரம்பித்தால் குடும்ப பிரச்சினை என்னும் இக்கட்டில் இருந்து விடுதலை பெறமுடியும்.

**ஆதியாகமம் 1:27-28**
**(27.) தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். 28. பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.**

தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். தேவனுடைய நோக்கம் குடும்பம் ஆசீர்வதிக் கப்பட வேண்டும். ஆனால் குடும்பங்கள் இடையே பிரச்சினை கள் உருவாக வேண்டும் என்ற நோக்கம் பிசாசினுடையது. வேதம் சொல்கிறது; **யாக்கோபு 4:7 அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்.**

குடும்ப பிரச்சினை என்னும் இக்கட்டில் இருந்து விடுதலை பெறவேண்டுமா? அதற்கு நீ செய்ய வேண்டிய காரியங்கள்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. உன் வீட்டின் தலைவன் இயேசு கிறிஸ்துவாக இருக்க வேண்டும்.

2. குடும்பத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய ஸ்தானங்களில் நிலைத்திருக்க வேண்டும்.

3. குடும்ப அங்கத்தினர் ஒவ்வொருவரும் ஒருவரை ஒருவர் கனப்படுத்த வேண்டும்.

4. ஒருவர் மேல் ஒருவர் அன்பாக இருக்க வேண்டும்.

5. குடும்ப பலிபீடத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

6. குடும்பமாய் ஆலயத்திற்கு செல்ல வேண்டும்.

7. குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டால் அமைதியான முறையில் பேசித் தீர்க்கப்பட வேண்டும்.

8. பிரச்சினைகள் தீர்க்கமுடியாவிட்டால் ஆலோசனைக்காக உன் போதகரிடத்தில் குடும்பமாக செல்ல வேண்டும்.

9. குடும்ப பிரச்சினை என்னும் கட்டுடன் நீ பரலோகத்திற்கு செல்ல முடியாது.


10. குடும்ப பிரச்சினையை உன் ஆண்டவரிடம் கூறி விடாப்பிடியாக ஜெபிக்க வேண்டும்.

**சங்கீதம் 102:19-20**

**(19.) கர்த்தர் கட்டுண்டவர்களின் பெருமூச்சைக் கேட்கவும், கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை விடுதலையாக்கவும், 20. தம்முடைய உயர்ந்த பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பார்த்து, வானங்களிலிருந்து பூமியின்மேல் கண்ணோக்கமானார்.**



# குறுக்கெழுத்துப் போட்டி - 107, வினா விடை - 109



## சரியான விடை எழுதியவர்கள்

**காரைநகர்**

01. நா.அன்னாள்
02. நா.கிறிஸ்தீனா
03. வி.அனுராதா
04. க.தனு
05. பா.அனுகரன்
06. பா.அனுசியா

**வடகாடு**

07. பா.மாலா +

**பாண்டவெட்டை**

08. சி.சிவனேஸ்வரன்
09. சி.சுமித்திரா
10. மு.ஜெசிந்தா

**நாவற்குழி**

11. ஆ.றெஜினா +

* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
\+ குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம்மை நினைக்கும் தேவன்

ஜசிந்தா அக்கா




ஒருபோதும் இணைபிரியாத இரு பிச்சைக்காரர்கள் பிச்சை எடுக்கப்புறப்பட்டார்கள். போகும் வழியில் முதலாவது பிச்சைக்காரன் 'இன்றைக்கு நமக்கு யார் பிச்சை கொடுப்பார்களோ? என்ன சாப்பாடு கிடைக்குமோ....?' என்று முணுமுணுக்க, **'நம்மையும் நினைக்கிற ஆண்டவர் இருக்கிறாரே'** என்று இரண்டாவது பிச்சைக்காரன் கூறிக்கொண்டே இருவரும் ஒரு வீட்டுக் கதவைத் தட்டினார்கள்.

அவ் வீட்டின் எஜமாட்டி கதவைத் திறந்து வெளியே வந்தாள். 'ஐ...ஐயோ..... இருவர் இருக்கிறார்களே, நான் என்ன செய்ய..?' என்று மனதுக்குள் முணுமுணுத்தாள். 'அம்மா ஏதாவது சாப்பிடத் தா அம்மா..' என்று முதலாவது பிச்சைக்காரன் கேட்டான். வீட்டினுள் சென்ற எஜமாட்டி இருந்த சாதத்தை சரி செய்து கொண்டு வந்து முதலாவது பிச்சைக்காரனிடம் கொடுத்தாள். சாதத்தை வாங்கிய இணைபிரியாத பிச்சைக்காரன் பிரிந்தே சென்றுவிட்டான்.

இரண்டாவது பிச்சைக்காரன் வாசலருகே காத்திருந்து... காத்திருந்து... அலுத்துப்போய்விட்டான். நேரம் கடந்துவிடவே அவன் கவலை கொள்ள ஆரம்பித்தான். எஜமாட்டி என்னைக் காணவில்லையோ.... எனவும் நினைத்தான். ஏன் நான் எல்லோராலும் எப்பொழுதும் ஒதுக்கப்படுகிறேன். என்னிடத்தில் என்ன குறைவு உள்ளது? ஆனால் முதல் பிச்சைக்காரனுக்கு உணவு கிடைத்ததே என்று தன்னையே நொந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக நேரம் சென்றதினால் சாப்பாடு கிடைக்குமோ என சந்தேகப் பட்டான். அன்று எஜமாட்டியின் மகளின் பிறந்தநாள். வீட்டினுள் சென்ற அவள் புரியாணி தயாரித்து பிச்சைக்காரனுக்கும் கொடுக்கலாம் எனத் திட்டமிட்டிருந்தாள்.

அதை அறியாத பிச்சைக்காரன் கலங்கி, புலம்பி, வேதனைப் பட்டுக்கொண்டிருந்தான். அந் நேரத்தில் எஜமாட்டி புரியாணி பார்சலோடு வந்து 'இதோ சாப்பிடு' என்றாள். பிச்சைக்காரனின் முகம் மலர்ந்தது. கலக்கம் நீங்கியது. புலம்பல் பறந்தது. அப்பொழுது தான் **'நம்மையும் நினைக்கிற ஆண்டவர் இருக்கிறாரே'** என்று தான் சொன்னதை நினைவுகூர்ந்து ஆண்டவருக்கு நன்றி சொன்னான். எஜமாட்டிக்கும் நன்றி கூறி மகிழ்ச்சியோடு கடந்து சென்றான்.

பிள்ளைகளே உங்கள் விண்ணப்பங்களுக்குப் பதில் தாமதிக்கிறதா? நீங்களும் கலங்கிப் புலம்பாமல், ஸ்தோத்திரத்தோடு காத்திருங்கள். கர்த்தருடைய வேளையில் மிகவும் நல்ல பதில்களைப் பெற்றுக் கொள்வீர்கள்.

**ஏசாயா 60:5 உன் இருதயம் அதிசயப்பட்டுப் பூரிக்கும்.**

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

பெந்தகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியைப் பெற்ற சீஷர் கூட்டத்தின் தொகையை ஐயாயிரம் பேர் சாப்பிட்ட மீனின் தொகையைக் கொண்டு **பெருக்கி** அதிலிருந்து மணவாளனுடைய வருகைக்கு எதிர்கொண்டு போக புறப்பட்ட கன்னிகையின் தொகையை **கழித்து** வரும் தொகையோடு இயேசு கிறிஸ்துவின் காலத்திலிருந்த எருசலேம் தேவாலயம் கட்டப்பட்ட வருஷத்தை **கூட்டி** வரும் எண் எதைக் குறிக்கும்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

## வினாவிடை 109
## சரியான பதில்கள்

01. ஓரேப் பர்வதம் - யாத்திராகமம் 3:1-4
02. சாலொமோன் - பிரசங்கி 7:7
03. அப்தோன் - நியாயாதிபதிகள் 12:13-14
04. இஸ்போசேத் - 11சாமுவேல் 2:10
05. ஆகாஸ் - ஆசீரியாவின் ராஜாவாகிய தில்காத்பில்நேசரால் (11நாளா 28:16-21)
06. அர்பா - யோசுவா 14:15
07. இஸ்ரவேலர் - நியாயாதிபதிகள் 8:33
08. வேவுகாரர் - எண்ணாகமம் 13:25, 14:34
09. இப்சான் - நியாயாதிபதிகள் 12:8-9
10. கீகோன் - 1இராஜாக்கள் 1:33, 38, 45





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## பண்டித ராமாபாய்

## 1852 - 1922

### அடைக்கலம் கொடுங்கள்

முக்தி மிஷன். ஆதரவற்ற பெண்களின் அடைக்கலப்பட்டணம் இது. திக்கற்ற பெண்களின் உறைவிடம். தேவதாசிகளின் தெய்வீக நிலையம்.

இந்திய நாட்டின் வரலாற்றில் சுமார் 150 வருடங்களுக்கு முன், குழந்தைத் திருமணம் நடைமுறையிலிருந்தது. இளம் வயதில் கணவர் மரித்துவிட்டால் மனைவி தீயில் எரித்து கொல்லப்படும் துயரச் சம்பவம் நிகழ்ந்து கொண்டிருந்தது. பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. தாழ்ந்த குல சாதியினர் மிகவும் இழிவுபடுத்தப்பட்டனர்.

இந் நிகழ்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க ஆண்டவர் ஓர் விடுதலைப் போராட்ட வீராங்கனையைத் தேர்ந்தெடுத்தார். அவர் தான் பண்டிதராமாபாய்.

இளம் வயதிலேயே பல இன்னல்களை வாழ்வில் அனுபவித்திருந் தாலும், அவைகளைப் பொருட்படுத்தாது சமூகத் தீமைகளை வேருடன் அகற்ற தன்னை அர்ப்பணித்தார்.

பூனாவில் 'சாரதா சதன்' என்ற அமைப்பை ஏற்படுத்தி, ஒதுக்கப்பட்ட இந்திய விதவைகளுக்கும், அனாதை பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கொடுத்தார். அப்பெண்களுக்கு கைத்தொழில்களை கற்றுக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவதாசி முறைகளை அகற்ற பாடுபட்டார். சமுதாயக் கொடுமைகளுக்கு எதிராக பல நூல்களை எழுதினார்.

வாழ்வில் சறுக்கி விழுந்த பெண்களுக்கு அடைக்கலம் கொடுத்த இந்தியப் பெண் இவர். இந்தியாவிலேயே முதன் முதலாக பாலர் பள்ளியையும் ஆரம்பித்தார். கண்ணொளி இழந்தவர்களுக்கு 'பிரெய்லி எழுத்து' முறையைக் கற்றுக் கொடுத்தார்.

பண்டித ராமாபாய் ஜெபத்தையே தனது சக்தி நிலையமாகக் கொண்டிருந்தார். மராட்டிய மொழியில் வேதாகமத்தைத் தந்து, ஆயிரமாயிரம் பெண்களின் வாழ்வில் ஒளியேற்றினார். அடைக்கலமற்றோரின் அன்னையான ராமாபாய் ஏப்ரல் 05, 1922இல் நிலையான அடைக்கலத்தில் பிரவேசித்தார்.

**அன்பரே! கிறிஸ்துவின் அன்பினால் மாபெரும் பணிகளைச் செய்ய ஆயத்தமா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: என்னைப் பயன்படுத்தியவர், உன்னையும் பயன்படுத்த வல்லவர் — பண்டித ராமாபாய்.**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஏப்ரல் 05**

# லில்லியன் டிரேஸர்
# 1887 - 1961



## ஆதரவற்றோருக்கு...

மிஷனெரிப்பணி என்பது இரண்டு வகைப்படும்.

ஒன்று, நற்செய்தி அறிவிப்பது,

இரண்டு, நற்செய்தியாக வாழ்வது.

ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருந்தால் மட்டுமே அது பயன்படும் என்பது போல மிஷனெரிப்பணியில் இவ்விரண்டும் இன்றியமையாததாகும். வேதாகமத்தை பிரசங்கிப்பது மட்டுமல்லாமல், வேதாகம சத்தியத்தின்படி வாழ்ந்துகாட்டவே நாம் அழைக்கப்படுகிறோம். இதையே இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் வாழ்ந்த போது, நமக்கு முன்மாதிரியாய் காண்பித்துச் சென்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1888ஆம் ஆண்டு பிறந்த லில்லியன் டிரேசர் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி தன்னை ஒரு மிஷனெரியாக அர்ப்பணித்தார். ஆப்பிரிக்க நாட்டிற்கு அழைக்கப்பட்ட இவர், 1911ஆம் ஆண்டு, எகிப்திற்குச் சென்றார். எந்தவித பண உதவியும் இல்லாமல் யாருடைய உதவியையும் நாடாமல், தன்னந்தனியாக அங்கே தன் பணியை ஆரம்பித்தார்.

05 வருட கடின உழைப்பிற்குப் பிறகு 50 குழந்தைகளுக்கு ஆதரவு கொடுத்தார். தன் பணியைக் கண்டு, யாரெல்லாம் மன நிறைவு அடைந்தனரோ அவர்கள் கொடுக்கும் தயவுள்ள காணிக்கையைப் பெற்றுக் கொண்டு தன் கடமையில் கண்ணியத்துடன் கருத்தூன்றி செயல்பட்டார்.

நிலங்கள் வாங்கப்பட்டு, ஆதரவற்றோர் இல்லங்கள் கட்டப்பட்டன. இவரின் உத்தமமான உழைப்பைக் கண்ட சில திருச்சபைகள், தங்களின் உதாரத்துவமான காணிக்கைகளால், இவரின் பணியைத் தாங்கினர். 1923ஆம் ஆண்டு இவருடைய இல்லமானது 300 சிறுவர்களை உள்ளடக்கியதாக காணப்பட்டது. பல நேரங்களில் எதிர்கொள்ள முடியாத பிரச்சினைகளும், தேவைகளும் சூழ்ந்தபோதும், ஆண்டவர் எல்லாவற்றினின்றும் பாதுகாத்து உதவிகளைச் செய்தார்.

இவர் தன் உலக வாழ்க்கை முடிக்கும் போது 1400 சிறுவர்களும்; விதவைகளும் இவர் இல்லத்தில் காணப்பட்டனர். 8000க்கும் அதிகமானோரை கிறிஸ்துவின் அன்பில் வளர்த்த இவர், ஆதரவற்றோரின் அன்னையாக தன் பணிகளை நிறைவேற்றினார்.

**அன்பரே! ஆதரவற்றோர்கள் மீது உங்களின் கரிசனை என்ன?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** தேவனுடைய சித்தத்தைச் செய்வது நமது அலுவல்களில் ஒன்றல்ல. அதுவே நமது அலுவல் – அந்திரேயா துஷ்

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" செப்டம்பர் 27**

---

**அனல் 2022 வைகாசி – ஆனி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

**மேகம்**

(1இராஜா 18:44-45, யாத் 24:15-16, 40:38, 1இராஜா 8:10-11, லூக்கா 9:34, வெளி 1:7, 1தெசலோ 4:17)

---



**சரியான விடை எழுதியவர்களில் பாராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**

**வினா விடை – 100**

**க.தனு**
**[காரைநகர்]**



**குறுக்கெழுத்துப் போட்டி – 107**

**பா.மாலா**
**[வடகாடு]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போதகர் வேதநாயகம் மகாராஜா




**சங்கீதம் 35:10 சிறுமைப்பட்டவனை அவனிலும் பலவானுடைய கைக்கும், சிறுமையும் எளிமையுமானவனைக் கொள்ளையிடுகிறவனுடைய கைக்கும் தப்புவிக்கிற உமக்கொப்பானவர் யார் கர்த்தாவே, என்று என் எலும்புகளெல்லாம் சொல்லும்.**

நாங்கள் இதுவரைக்கும் எங்கள் வாயாலே சாட்சி சொல்லி இருக்கின்றோம். ஆனால் தாவீது கூறுகின்றான்; **'என்னுடைய எலும்பும் சாட்சி சொல்லும்'.** இதுவரைக்கும் அனேக சாட்சிகள் சொல்லியிருக்கிறோம். உண்மைக்கு அவைகள் எமது எலும்புகள் அனல் கொண்டு சொல்லப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சியா? என்பதனை நாங்கள் பார்க்க வேண்டும். தாவீது தான் நெருக்கப்படுகின்ற நேரத்திலே இப்படியான சிறந்த வார்த்தையை தேவனைப் பார்த்து சொல்கின்றார்; **'உமக்கு ஒப்பானவர் யார் கர்த்தாவே, என்று என் எலும்புகள் எல்லாம் சொல்லும்'.** ஆகவே இவ் வேளையில் உங்களுடைய பாரங்களையும், துக்கங்களையும், ஏக்கங்களையும் தேவன் அறிந்திருக்கிறார். ஆனால் இப்படியான நிலைகளின் மத்தியில் எலும்புகள் அனல் பற்றிக் கொள்கின்ற அனுபவத்தை தாவீது பெற்றிருந்தார். இப்படியான இந்த அனுபவம் தான் அவர் ஆண்டவருக்கு பிரியமான, ஆண்டவருடைய இருதயத்திற்கு ஏற்றவர் என்று தேவனிடமிருந்து சாட்சியை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

ஆகவே நாங்கள் எதனைப் பார்க்கப்போகின்றோம் என்றால், தேவனைக் குறித்த ஒரு சாட்சியை சொல்வதற்கு முன்பதாக அவனுடைய வாழ்க்கையில் அவன் முகம்கொடுத்த காரியங்களில் எப்படி அவன் செயலாற்றினான், தனக்கு வந்த நிந்தைகளில், தனக்கு வந்த அவமானங்களில், தனக்கு வந்த துன்பங்களில் எப்படி அவன் செயற்பட்டான் என்பதை பார்க்கும் போது நிச்சயமாக அவன் இப்படியான ஒரு வார்த்தையைச் சொன்னது ஏற்றது என்று நாம் காணக்கூடியதாக இருக்கிறது. தாவீது தன்னுடைய வாழ்க்கையிலே தேவனை நம்பினான்; எல்லாம் அவனுக்கு கைகூடியது. தாவீதின் எலும்புகள் அனல் கொண்டவையாக இருந்தபடியால்.

## 01. தேவனுடைய ஒத்தாசைக்காக காத்திருந்தான்

**சங்கீதம் 35:1-3 (1.) கர்த்தாவே, நீர் என் வழக்காளிகளோடே வழக்காடி, என்னோடு யுத்தம்பண்ணுகிறவர்களோடே யுத்தம்பண்ணும். 2. நீர் கேடகத்தையும் பரிசையையும் பிடித்து, எனக்கு ஒத்தாசையாக எழுந்துநில்லும். 3. என்னைத் துன்பப்படுத்துகிறவர்களோடு எதிர்த்துநின்று, ஈட்டியை யோங்கி அவர்களை மறித்து: நான் உன் இரட்சிப்பு என்று என் ஆத்துமாவுக்குச் சொல்லும்.**

உண்மையில் இவன் தேவனை நம்பினபடியால், தேவனை விசுவாசித்தபடியால், தேவன் மீது அளவற்ற பக்திமை உள்ளவனாய் இருந்தமையால் தனக்கு வந்த இந்த துன்பத்தின் நேரத்தில் அவன் தேவனோடு இருந்த உறவில் எந்த ஒரு இடைவெளியும் விடாமல் தேவனோடு அனல் கொண்டு கொழுந்துவிட்டுளிகின்ற அந்த நிலையில் எந்தவொரு தளர்வும் இல்லாமல் அணைந்து போகின்ற நிலைக்கு செல்லாமல், அவன் சொல்கிறான்; **'நீர் எனக்காக யுத்தம் பண்ணும், எனக்கு ஒத்தாசையாக எழுந்து நில்லும், என்னை நோக்கி வருகிறவர்களை நீர் மறியும்.'** இதனை நாம் சாதாரணமாக சொல்ல முடியாது. தேவனோடு சரியான உறவு நிலை இருந்தால் தான் இதனைச் சொல்ல முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் ஒருவேளை மன முடைந்து, மனம் நொந்துபோய் உங்களுக்கு வருகின்ற அந்த வேதனையை தாங்க முடியாமல் இருக்கலாம். அப்படியிருந்தால் உங்களுக்கு நல்ல செய்தி, உங்களை அழைத்த தேவனிடம் நீங்கள் சொல்ல முடியும். அந்த 'தேவன் உங்களுக்காய் யுத்தம் பண்ணுவார், உங்களுக்காய் எழுந்து நிற்பார். உங்களுக்கு வருகின்ற அந்த ஆபத்தை அவர் மறித்து உங்களைக் காத்துக் கொள்வார்.' இது தான் தாவீதின் வாழ்வின் அனுபவம். தேவனுக்கு பிரியமானவனின் வாழ்வின் அனுபவம். ஆகவே உங்களுடைய வாழ்க்கையின் அனுபவம் ஆண்டவருக்கு பிரியமாய் வாழ்ந்தால் நிச்சயமாய் இந்த ஆசீர் வாதம் உங்கள் வாழ்க்கையின் பங்காய்மாறும்.

உங்களுக்கு ஒத்தாசை அனுப்பும் தேவன் இருக்கிறார். அவரை காலை யிலும், மாலையிலும் மாத்திரமல்ல எந்த நேரத்திலும் இடைவிடாமல் தேடும்போது அவர் ஒத்தாசை அனுப்பு வார். சோர்ந்து போகத்தேவையில்லை. சோர்ந்து போகக்கூடிய சூழ்நிலை வந்தாலும் தேவன் உங்களுக்கு ஒத்தாசை அனுப்புவார். ஆண்டவர் உங்களைக் காண்கிறார். உங்கள் கண்ணீரைக் காண்கிறார். அவரை நோக்கிப் பார்க்கும் போது அவரைக் கடந்து எதுவும் உங்களை அணுக முடியாது. ஒரு சந்தர்ப்பத்தில் சனகெரிப் ராஜா எசேக்கியா ராஜாவுக்கு விரோத மாக வந்த போது வேதம் சொல்கிறது, சனகெரிப் ராஜாவின் நிருபத்தை எசேக்கியாவின் கையில் கொடுத்தார் கள். அந்த நிருபத்தை வாங்கிய எசேக்கியாவினால் ஒன்றும் செய்ய முடியவில்லை, எதிரிப்படைகள் எல்லாம் சூழ்ந்துவிட்டார்கள். ஒன்றுமே செய்ய முடியாது. எனவே அந்த நிருபத்தை நேராக தேவ சமூகத்திற்கு கொண்டு சென்றான். அதனை தேவனுக்கு காண்பித்தான். பெரிதான அற்புதம் நடந்தது. தேவனுடைய தூதன் ஒருவன் வந்து ஒரு இரவிலே இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் அசீரியப்படை களை கொன்று போட்டான். இது தான் ஒத்தாசை அனுப்பும் தேவன்.

உங்களுக்காய், எனக்காய் எழுந்து நிற்கும் தேவன் அவர் எங்களுக்காய் யுத்தம் பண்ணும் கர்த்தர். அந்த ஒத்தாசையைத் தருகின்ற தேவனை நம்புங்கள். அவர் யாவும் கைகூடிவரப்பண்ணுவார். சிலவேளை உங்கள் ஜெபங்களுக்கெல்லாம் இன்னும் பதில் வரவில்லை, என்ன செய்வது என்று நினைக்கின்றீர்களா? அவரை நம்புங்கள்; அவர் யாவும் கைகூடிவரப் பண்ணுவார். உங்கள் கண்ணீரின் கதை தொடர்ந்து கொண்டு செல்கின் றதா? நீங்கள் நம்புங்கள், ஆண்டவர் யாவும் கைகூடிவரப்பண்ணுவார். ஆகவே நீங்கள் முதலாவது நம்ப வேண்டும் தாவீதின் எலும்புகள் அனல் கொள்வதற்கு அவன் செய்த காரியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா நேரத்திலும் தேவனை தனது ஒத்தாசையாகக் கொண்டிருந்தான்.

## 02. தேவன் தன் வார்த்தையைச் சொல்லும்படி காத்திருந்தான்

**சங்கீதம் 35:3b ஈட்டியை யோங்கி அவர்களை மறித்து: நான் உன் இரட்சிப்பு என்று என் ஆத்துமாவுக்குச் சொல்லும்.**

என் இரட்சிப்பு நீர் என்று என் ஆத்துமாவிற்கு சொல்லும். அப்படி யென்றால் ஒரு சத்தத்தைக் நான் கேட்க விரும்புகின்றேன். உம்முடைய வாயி லிருந்து என்னைக் குறித்து வருகின்ற ஒரு வார்த்தையை நான் கேட்க விரும்புகின்றேன். எனக்காய் நீர் தரும் ஒரு பதிலை நான் கேட்க விரும்புகின் றேன். ஆண்டவரே எனக்குச் சொல்லும் என்பதாகும்.

**சிலவேளை எமது திசை தெரியாத நேரங்களில் எங்களுக்கு பாதை காட்டுவது தேவனுடைய ஒரு வார்த்தை. எது சரி அல்லது இதனை செய்யலாமா? செய்யக்கூடாதா? என்கிற போது எங்களுக்கு சரியான தெளிவைத்தருவது தேவனுடைய ஒரு வார்த்தை. சிலவேளை நாம் மன முடைந்து துன்பத்தின் மேலே துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக் கிற நேரம் அந்த துன்பத்தையெல்லாம் துடைத்தெறியும்படியாய் தேவனுடைய அந்த ஒரு வார்த்தையின் சத்தம் காரியங்களை செய்யும்.**

தாவீது தேவனைப் பார்த்துக் கேட்கிறான், தன்னைத் தொடக்கூடிய, தான் தொடர்ந்து பின்பற்றக்கூடிய ஒரு வார்த்தைக்காய் எதிர்பார்த்திருக்கி றேன். தேவனுடைய வார்த்தை சில வேளை அது சிறியதாக இருந்தாலும், அந்த வார்த்தைக்குள் தேவனுடைய பெரிதான வல்லமை இருக்கின்றது. சிலவேளை நீங்கள் பத்து வருடம் சுமந்து வந்த துன்பத்தை தேவனுடைய சிறிய வார்த்தை உடனடியாக நீக்கி விடும்.

ஒரு உதாரணக்கதை ஒன்றை குறிப்பிடவிரும்புகின்றேன்: ஒரு காரியத் தைக் குறித்து நான் வேதனைப்பட்டு மனமுடைந்து இருந்தேன். சரியாக வேதனைப்பட்டு, துன்பப்பட்டு இருந்தேன். நான் ஜெபிக்க அமர்ந்தால் அழுகை தான் வரும். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு நாள் அதிகாலையில் நான் ஜெபிக்கும் படியாய் எழுந்து அமர்ந்த போது எனது காதுகளில் தெளிவாக கேட்டது; **'இஸ்ர வேலே பயப்படாதே! நான் உன் தேவன்'** அந்த சிறிய வார்த்தை எனக்கு இருந்த துன்பத்தை எப்படி அகற்றி யதோ தெரியாது. அது அப்படியே போய்விட்டது. என்னை சூழ்ந்திருந்த பெரியதொரு மனவேதனையை ஆண்ட வருடைய அந்த ஒரு வார்த்தை அகற்றிவிட்டது.

உங்களுடைய வாழ்க்கையிலும் ஏற்படும் வேதனைகள், பிரச்சினை களை தேவனிடம் சொல்லப்பழகினால் நிச்சயமாய் தேவனுடைய சத்தம் உங்களிடத்திற்கு வரும். அந்த சத்தம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களைச்சூழ்ந்திருக்கின்றவேதனையை தாங்கத்தக்கதாய் அல்லது அவற்றை முற்றுமாய் அகற்றக்கூடிய வல்லமை யான காரியங்களைச் செய்யும். ஆகவே நீங்கள் அதிகாலையில் தேவனைத்தேடுங்கள். தேவன் சொன்னார், **'அதிகாலையில் என்னைத் தேடுகிறவன் என்னைக் கண்டடைவான்'** உங்களு டைய பிரச்சினைகளுக்கு ஆண்டவர் ஒரு முற்றுப்புள்ளியை வைப்பார். அதிகமாக அதிகாலையில் தேவனைத் தேடுங்கள். அவர் உங்கள் துக்கத்தை யெல்லாம் சந்தோஷமாய் மாற்றுவார்.

தாவீது தனக்கு ஒரு நல்ல வார்த்தையைத் தரும் தேவன் தன் னோடு இருப்பதை அவன் நம்பினான். அந்த வாக்குத்தத்தம் தரும் ஆண்டவர் உண்மையுள்ளவர் என்பதை அவன் நம்பினான். அதனால் கேட்டான், ஆண்டவரே ஒரு வார்த்தை சொல்லும். ஒரு வார்த்தை ஆண்டவர் சொல்லுவார். அது ஒருவேளை ஆண்டவர் நேரடியா கப் பேசினால் தான் ஏற்றுக்கொள் வேன், ஊழியக்காரர் பேசினால் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று இருந் தால் கர்த்தர் ஒரு காலமும் பேசமுடியா மல் போய்விடும். இன்றைக்கு ஆண்டவர் தன்னுடைய தாசர்களைக் கொண்டு கொடுக்கின்ற வார்த்தை களை நம்புங்கள். உங்கள் வாழ்க்கை யில் ஆசீர்வாதத்தைக் கர்த்தர் உண்டு பண்ணுவார்.

## 03. தூதர்களின் (தேவனுடைய நியமம்) உதவிக்காய் காத்திருந்தான்

**சங்கீதம் 35:5-6 (5.) அவர் கள் காற்றுமுகத்தில் பறக்கும் பதரைப் போலாவார்களாக; கர்த்தருடைய தூதன் அவர்களைத் துரத்துவானாக. 6. அவர்களுடைய வழி இருளும் சறுக்கலுமாயிருப்பதாக; கர்த்தருடைய தூதன் அவர்களைப் பின்தொடரு வானாக.**

முதலில் ஆண்டவரைப் பார்த்துச் சொன்னான்: 'எழுந்து நில்லும்', பின்னர் 'பரிசையையும் ஈட்டியையும் பிடியும், துணை நில்லும்' அப்படி கூறினான். அது அவனுக்கும் தேவனுக் கும் உள்ள உறவு. இங்கே பார்க்கி றோம், **'கர்த்தருடைய தூதன் அவர் களைத் துரத்துவானாக'**. எனக்கு எதிராக வருபவர்களைத் துரத்தும். ஆண்டவர் இயேசு சொன்னார்: 'ஒவ்வொரு சிறுபிள்ளைகளுக்கும் ஒவ்வொரு தூதர்கள் இருக்கிறார்கள், அவர்கள் எப்பொழுதும் பிதாவினுடைய சமூகத்தை தரிசித்துக் கொண்டு இருக்கிறார்கள்.' எங்கள் எல்லாருக்கும் ஒவ்வொரு தூதனை தேவன் நியமித்து வைத்திருக்கிறார். வேதாகமத்தின்படி தூதர்கள் அனேக சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

மரியாளுக்கு வந்து தேவனுடைய செய்தியை அறிவித்தது தூதன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாளுக்கு நியமிக்கப்பட்ட யோசேப்பு அவளைத் தள்ளிவிடலாம் என்று எத்தனித்த போது இல்லை யென்று சொன்னவன் தூதன்,

எசேக்கியா ராஜா அழுதபோது அவனுக்காய் யுத்தம் செய்தவன் தூதன்,

இயேசு கிறிஸ்து கெத்சமனே தோட்டத்தில் இரத்தத்தின் பெருந்துளி களாய் வியர்வை விழுந்த போது இயேசு கிறிஸ்துவை வந்து பெலப்படுத்தின வன் தூதன்,

யோசுவா அழுக்கு வஸ்திரம் தரித்திருந்த போது அதனை மாற்றும் படியாய் சொன்னவன் தூதன்....

இப்படி வேதாகமத்தில் அனேக தூதர்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றார் கள். வெளிப்படுத்தின விசேஷத்தில் பார்த்தால், அனேக தூதர்களைக் குறித்து கூறப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவும் தேவனுடைய தூதர்களைக் குறித்து கூறினார்.

ஆகவே இங்கே தாவீது எதனைக் குறித்து நம்பினான் என்றால் என்னுடைய தூதன் எனக்காய் காரியத் தைச் செய்ய வேண்டும் என்பதாய். **தாவீது எந்தக் கட்டத்திலும் தேவனை நம்பினான்.** அவன் தூதனைப் பார்த்துச் சொல்கிறான்; **'எனக்காய் அவர்களைத் துரத்தும்.'** அப்படியென் றால் இவன் தன்னுடைய முழு நம்பிக் கையையும் தேவன் மீது, தேவனுடைய வல்லமை மீது, தேவனுடைய நியமத் தின் மீது வைத்தான். ஒரு காரியத்தைக் குறித்து சிந்திக்க வேண்டும். இவனு டைய வாழ்நாட்களில் தேவனுக்கு பிரியமாய் வாழ தேவன் ஒத்தாசை செய்தார். அடுத்து இவனுடைய ஜெபத்தின்படி பார்க்கும் போது இவன் தூதர்களிடமிருந்து உதவிகளைப் பெற்றிருக்கிறான்.

தேவாலயத்தில் திருமண ஆராதனை நடைபெறும் போது மணமகன் முன்பதாக வந்து இருப்பார். மணவாட்டி மெதுமெதுவாய் முன்னோக்கி வரும் போது அவருக்கு உதவி செய்ய சிலர் இருப்பார்கள். அவள் அந்த மணவாட்டியின் வஸ்திரம் தரித்திருக்கும் போது அவளுக்கு எல்லாக் காரிங் களிலும் உதவி செய்யும்படியாய் இருப்பார்கள்.

அது போல நீங்களும் இயேசு கிறிஸ்துவின் உண்மையான கறை திறையற்ற மணவாட்டியாய் இருக்கும் போது தேவன் எப்படியாவது, யாரைக் கொண்டாவது உங்களுக்கு உதவி செய்வார். ஒருவேளை தன்னுடைய தூதர்களை அனுப்பி ஆண்டவர் உதவி செய்வார். இரட்சிப்பின் வஸ்திரம் உங்களிடத்தில் இருந்தால் நீங்கள் கலங்கத்தேவையில்லை, சோர்ந்து போகத்தேவையில்லை. உங்கள் துன்பத்தின் நேரத்தில் நீங்கள் சொல்ல முடியும், ஆண்டவரே எனக்கு உதவி செய்யும், தேவனே உம்முடைய தூதர்களை அனுப்பும். நிச்சயமாய் தேவன் தன்னுடைய மணவாட்டிக்கு உதவி செய்வார். இப்போது நீங்கள் யாரெல்லாம் மணவாட்டிகள்? தூய்மை யாய் இருக்கும் அனைவருக்கும் கர்த்தர் உதவி செய்வார். சோர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகவேண்டாம், உங்களுக்காய் கர்த்தர் ஏற்ற நேரத்தில் ஏற்ற காரியங்களைச் செய்வார். நீங்கள் உண்மையாக தேவனுடைய பிள்ளையென்றால் உங்கள் உயிர்போகும் வரைக்கும் ஆண்டவர் உங்களை எப்படியாவது போஷிப்பார், எப்படியாவது உங்களை உடுத்துவிப்பார், உங்களுக்கு தேவையான காரியங்களை ஏற்ற நேரத்தில் தேவன் நிறைவேற்றுவார். அவர் உங்களைக் கைவிடவேமாட்டார்.

தாவீதுக்கு தெரியும் தேவன் எனக்காய் காரியங்களைச் செய்வார் என்பது. இன்னொரு காரியத்தைப் பார்க்கலாம், பேதுருவை சிறைச்சாலையில் வைத்தார்கள், ஆனால் அங்கே கொடிய காரியம் நடைபெறுமுன்பதாக தூதன் பேதுருவின் விலாவில் தட்டி எழும்பி, விடுவித்தான். **நீங்கள் உண்மையாக தேவனுடைய பிள்ளையாக இருந்தால் பெரிய ஆபத்தின் நேரங்களில் உங்களுக்கு உதவி செய்யும்படியாய் தேவன் காரியங்களைச் செய்வார்.** நீங்கள் ஆண்டவருக்கென்று அர்ப்பணித்த வாழ்வைவிட்டு திரும்பி பார்க்க வேண்டாம். கிறிஸ்துவுக்காய் அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்ட நீங்கள் மறுபடி அந்த இரத்தத்தை குற்றப்படுத்தும் காரியங்களைச் செய்ய வேண்டாம். ஆண்டவர் அழைத்த அழைப்பில் பரிசுத்தமாய் நிலைத்திருந்தால் நிச்சயமாய் கர்த்தர் உங்களை பெரிய பெரிய ஆபத்துக்களில் எல்லாம் காத்துக்கொள்வார்.

**'சிறுமைப்பட்டவனை அவனிலும் பலவானுடைய கைக்கும், சிறுமையும் எளிமையுமானவனைக் கொள்ளையிடுகிறவனுடைய கைக்கும் தப்புவிக்கிற உமக்கொப்பானவர் யார் கர்த்தாவே'** ஏனென்றால் தாவீதின் வாழ்வில் இந்த அனுபவம் நிஜயம். தாவீதின் வாழ்வில் இது நடந்த சம்பவம். ஆகவே அவன் அதனைச் சொல்கிறான்; **'என் எலும்புகளெல்லாம் சொல்லும்'** உங்களுக்கு வருகின்ற என்ன பயங்கரங்களாய் இருக்கட்டும், என்ன வேதனைகளாய் இருக்கட்டும் எல்லாவற்றின் மத்தியிலும் தேவன் உங்களைக் காப்பாற்றுவார். தேவன் உங்களுக்கு எதிராய் எழும்பும் ஆயுதங்களை முறித்துப்போடுவார் என்ற நம்பிக்கையோடு நீங்கள் தேவனை நோக்கி தொடர்ந்து வாழ உங்களை அர்ப்பணிக்கும் போது நிச்சயமாய் ஆண்டவருக்காய் நீங்கள் சாட்சி சொல்ல முடியும். **'என் எலும்புகளெல்லாம் உமக்காய் சாட்சி சொல்லும்'** அந்த உள்ளான உணர்வோடு நீங்கள் சொல்ல முடியும்.

கர்த்தர் வரும் நாட்களில் உங்களை பாதுகாப்பார், ஆசீர்வதிப்பார். எப்படியென்றால் நீங்கள் உண்மையான அனலுள்ள வாழ்வு வாழும் போது அவர் ஆசீர்வதிப்பார். உடலில் ஏற்பட்ட தீயை ஈரமான சாக்கைக் கொண்டு அணைக்க முடியும். ஆனால் எலும்புகளில் ஏற்பட்ட இந்த நெருப்பை யாரால் அணைக்க முடியும்? ஒன்றில் அதனை தாவீதால் அணைக்க முடியும். அதாவது அந்த நபர் தான் அதனை அணைக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனுடைய ஆவிக்குரிய வாழ்வில் ஏற்பட்ட பிரகாசத்தை இது காண்பிக்கிறது. நாம் ஒரு கட்டத்திலும் இன்னொருவரை சாட்டக்கூடாது. உண்மையில் நம்முடைய எலும்புகள் அனல் பற்றினால் அதனை மற்றவர்களால் அணைக்க முடியாது. அது உள்ளாக நடைபெறுகின்ற வேலை. என்னுடைய அனலை நான் தான் அவித்துப்போட முடியுமேயொழிய இன்னொருவரை சாட்டுச் சொல்ல முடியாது.

பிசாசுக்கும் தெரியும் தன்னுடைய அழிவின் வேளை வருகிறது என்று. எனவே எவ்வளவு அதிகமாக தன்னால் வேலை செய்ய முடியுமோ அவ்வளவு வேகமாக வேலை செய்கிறான். ஆகவே நீங்கள் செய்ய வேண்டியது எல்லா வேளைகளிலும் தேவன் சார்பாக தேவனுக்காய் உண்மையுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்றால் உங்களுடைய ஆவிக்குரிய வாழ்வு அனல் உள்ளதாய் இருக்கட்டும். 'அக்கினிக்கு அணைந்துவிடும் குணாதிசயம் உண்டு' ஆகவே அதனை அணையவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உள்ளான வாழ்க்கையில் அனல் பற்றிக்கொண்டால் இந்த கடைசி நாட்களில் விழுந்து போகாமல் இருக்க முடியும். தாவீது சொன்னதைப் போல சொல்ல முடியும். உமக்கு ஒப்பானவர் யார் கர்த்தாவே?

நாங்கள் ஒரு அனலுள்ள வாழ்க்கைக்குத் திரும்புவோம். இது கடைசி நாட்கள். ஆண்டவருடைய இரகசிய வருகையின் நாட்கள் நெருங்கிக்கொண்டிருக்கிறது. உள்ளான வாழ்க்கையில் ஒரு பரிசுத்தம் காணப்படட்டும். தேவனோடுள்ள உங்கள் உறவைப் பலப்படுத்துங்கள். அனலாக்குங்கள். அப்படி நீங்கள் வாழ்ந்தால் கர்த்தர் உங்களுக்கு ஒத்தாசையாக இருப்பார். உதவி செய்வார். ஆண்டவருடைய வார்த்தை உங்களுக்கு வரும். தேவனுடைய தூதர்கள் உங்களுக்கு உதவி செய்வார்கள். எந்தக் கட்டத்திலும் தேவனுடைய உதவிக்காய் காத்திருங்கள், தேவனுடைய வார்த்தையைக் கேளுங்கள், அதனை வாஞ்சியுங்கள், தேவனிடத்திலிருந்து வரும் ஒத்தாசையை ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களுடைய வாழ்க்கையில் ஆசீர்வாதம் வரும். உங்கள் எலும்புகள் அனலுள்ளதாக இருக்கட்டும்.

**'தேவன் தாமே உங்களை
நிறைவாக
ஆசீர்வதிப்பாராக'**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெறுக்கக்கூடாது

**வேதப்பகுதி: தீத்து 3:1-7**

சுகந்தனிடம் திருடுகின்ற பழக்கம் இருந்தது. எனவே அவனிடம் பிற மாணவர்கள் பேசுவதில்லை. சம்பத்தும் அவனிடம் பேசாமல் விலகியிருந்தான். ஒரு நாள் சம்பத் தன்னுடைய அம்மாவிடம் இந்த விஷயத்தைச் சொன்னான். 'மம்மி - நான் சுகந்தனிடம் பேசவேமாட்டேன். அவன் கெட்ட பையன். அவன் திருடுவான். எனவே யாரும் அவனிடம் பேசமாட்டார்கள்' என்றான்.

ஆனால் சம்பத்தின் அம்மா, 'சம்பத் - சுகந்தன் திருடினான் என்பதற்காக அவனை நாம் வெறுப்பது தவறு. அவனுடைய தவறுகளை நாம் செய்யக்கூடாது. ஆனாலும் அவனுக்கு நாம் நம்முடைய அன்பை காண்பிக்க வேண்டும். நீ அவனிடம் அன்பாகப் பேசி அவனை திருத்தலாமே. நாமெல்லாரும் மோசமான பாவிகளாயிருந்தோம். இயேசு சுவாமி நம்மை வெறுக்காமல் நேசித்தாரே. அது போல நாமும் பிறரை நேசிக்க வேண்டும்' என்று ஆலோசனை சொன்னார்கள்.

**சிந்தனைக்கு:-**

**பிறர் செய்த தவறுகளை நாம் செய்யக் கூடாது. அவர்களின் தவறை ஆதரிக்கக் கூடாது. ஆனாலும் தவறு செய்துவிட்ட வர்களை வெறுத்த தள்ளக்கூடாது.**

# அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

**(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / ZION CHURCH என எழுதப்பட வேண்டும்)**

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 300.00 |
| இந்தியா (India) | 650.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1100.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 700.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 900.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 900.00 |

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தாமே செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:.........................................

முகவரி:.........................................

.........................................

.........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தருடைய இரட்சிப்புக்கு
நம்பிக்கையோடு
காத்திருக்கிறது நல்லது.

புலம்பல் 3:26

To:

Zion Church Office,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org